**NEWSPAPER CLIPPINGS**

| MEDIA | MAKKAL OSAI | DATE | 27 OCT 2013 (SUN) |
|---|---|---|---|
| PAGE / SECTION | 12 / LOCAL NEWS | READERSHIP | 98,000 |




# பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா பள்ளியில் பல்வேறு வசதிகளுடன் மருத்துவ மையம் 75 ஆயிரம் வெள்ளி செலவில் அமைக்கப்படுகிறது!

இ.எம். முகமது அலி, படம்- ஜி. மோகன்

பெட்டாலிங் ஜெயா, அக். 27– இங்கு பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா பள்ளியில் உள்ள இரண்டு பழைய கட்டடங்களை 75 ஆயிரம் வெள்ளி செலவில் சீர்படுத்தி மாணவர்கள் பயன் பெறும் அளவில் மருத்துவ மையம் அமைக்கப்படவுள்ளதாக பெட்டாலிங் ஜெயா லோட்டரி கிளப் தலைவர் சசிதரன் தெரிவித்தார்.

அதே கட்டடத்தில் பெண்களுக்காக புதிய கழிப்பறையும், ஆசிரியைகளின் குழந்தைகளைக் கவனிப்பதற்காக குழந்தைகள் பராமரிப்பு மையமும் அமைக்கப்படும் என்றார் அவர்.

இப்பள்ளியில் 1,400 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மருத்துவ மையம் இல்லாதது பெரிய குறையாகும்.

71 ஆசிரியைகள் பணிபுரிகின்றனர். அவர்களின் குழந்தைகளைப் பாதுகாப்புடன் கவனிப்பதற்கு குழந்தைகள் பராமரிப்பு மையமும் அமைக்கப்பட விருப்பதாக சசிதரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட இரண்டு கட்டடங்களை நேரடியாக குத்தகையாளர்களுடன் பார்வையிட்டார்.

